𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣 𑌏𑌵
𑌸𑌰𑍍𑌵𑌾𑌣𑍍𑌯𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑍍𑌯𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑌿
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂

(இ—ள்) இனியெதனால் சூக்குமமெனப்படுவானெதனாலுச்சரித்தமாத்திரையில் சூக்குமனாய்ப் பரசரீரங்களையெல்லாம் அதிஷ்டிக்கின்றான் அதனால்சூக்குமமெனப்படுகின்றான் (எ—று)

(வி—ரை) உச்சரித்தமாத்திரையில்=விசேஷசிந்தைசெய்த மாத்திரையில் என்றபொருள்பிரகரணத்துக்கேற்றவாறுகொள்ள வேண்டியது. சூக்குமனாகி=இந்திரியங்களுக்குப்புலப்படாத நிலைமையடைந்து. அதாவது இந்திரியங்களுக்குப்புலப்படத்தக்கபொருள்களுக்கு அத்தியந்த விலக்ஷணரூபனாய் முன்னே திருசியரூபனாய்த்தோன்றின பரமேசுவரன் பிறகுபிரத்தியக்கு ரூபனாய் பரசரீரங்களை=உத்தமாதமங்களாகிய தேவமர்த்தியாதி பரமோத்தமங்களாகிய பிரம்மவிஷ்ணுருத்திராதிசரீரங்களை; அதிட்டிக்கிறான்=பிரத்தியகபேதத்தால் வியாபிக்கின்றான் = ஓயாதப்பியசிக்கின்றவனுக்கு ஸர்வதிருசிய விலக்ஷணப் பிரத்தியகாத்துமரூபனாய் ஸர்வசரீராதிஷ்டாதிருசைதன்னியரூபனாய்த்தோன்றுவதால் சூக்குமனெனப்படுகின்றானென்பதுமுடிவு.

அவதாரணிகை

இனி சுக்கிலபதார்த்தத்தைக்குறிக்கின்றார்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌂
𑌯𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌚𑌾𑌰𑍍𑌯𑌮𑌾𑌣 𑌏𑌵
𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌤𑍇 𑌕𑍍𑌰𑌾𑌮𑌯𑌤𑌿 𑌚
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌶𑍁𑌕𑍍𑌲𑌂 எ—று

(இ—ள்) இனியெதனால் சுக்கிலமெனப்படுவானெதனாலுச்சரித்தமாத்திரையில் திரவமாய் மற்றவற்றையும் வயிக்கச்செய்வான் அதனாற்சுக்கிலமெனப்படுவான். எ—று

(வி—ரை) திரவமாய் = இளகியவஸ்துவைப்போல் அதாவது ஒருபொருளின்கண்ணே இச்சையுள்ளதைப்போல் தோன்றிவயிக்கச்செய்வான் தம்முள்ளே பிறப்பொருள்களையுமேற்று தன்மயமாக்கித் தாமுள்பட சொரூபத்தில் நிற்பான். கற்பூரத்தினிடத்தே பிறந்தசோதி கற்பூரத்தைஸம்ஹரித்து தான்சொரூபத்தில் ஒருங்குவதுபோல் சங்கற்பத்தாலுலகத்தைகற்பித்து சங்கற்பத்தையும் நசிப்பித்து சொரூபமாய்தங்கிநிற்பது சுக்கிலமாம். உபாஸ்தியிலும் பலவிதமூர்த்திகளாய் முன்தோன்றி சொரூபமாத்திரையாய் மிஞ்சிஸத்தாமாத்திரையாய் உபாஸகன் உபாஸியம் உபாஸ்தியென்ற திரிபுடியும் ஒழிந்து அத்வைதமாய் நிற்குமவஸ்தையும் இதனால் தழுவப்பட்டது.

அவதரணிகை

இனிவைத்தியுதபதத்துக்குப்பொருள்கூறுகின்றார்.

அத கஸ்மாதுச்யதே வைத்யுதம்
யஸ்மாதுச்சார்யமாண ஏவ
மஹதி தமஸி ஸர்வம் ஶரீரம்
வித்யோதயதி தஸ்மாதுச்யதே வைத்யுதம் (எ-று

(இ—ள்) இனியெதனால்வைத்தியுதம்எனப்படுகின்றான் எதனாலஉச்சரித்தமாத்திரையில் பெருத்தஇருட்டில் எல்லாச்சரீரத்தையும் பிரகாசிப்பிக்கின்றான்- அதனால வைத்தியுதமெனப்படுகின்றான். எ—று

(வி—ரை) பெருத்தகோர்இருட்டில்அவித்தையாகியபெருத்த அனாதியஞானத்தில் எல்லாச்சரீரத்தையும் ஈண்டுசரீரமென்றது எல்லாப்பிரபஞ்சத்திற்கு மாகுபெயராய் நின்றதுஆகவேஎல்லாப்பிரபஞ்சத்தையுமென்பதுபொருள். பிரகாசிப்பிக்கின்றார் = பிரகாசமெனப்படும சைதன்னியரூடமாகியசொரூபத்தால் உலகத்தையெல்லாம் விளங்கச் செய்கின்றாரென்பது தாத்பரியம் இதனாலேயே வைத்தியுதமென்ப்படுகின்றாரென்பதுகருத்து மற்றையதேயுக்களைக்காட்டிலும் மின்னல் அதிகவேகம்பொருந்தியதாதலால் அதனைஈசனுக்கொப்பாயெடுத்தது.எப்படிஉலகத்தில்மி

ன்னல்ஒரேகணப்பொழுதில் இருளையெல்லாம் விலக்குகின்றமதா அப்படி பிரம்மஞானமாது உலகவிருளை விலக்குமென்பது பொருள். ஆதலாற்றான் தஹரவித்தைகளில் மின்னற்கொடிபோன்றாசனைத்தியானிக்கும்படி விதிக்கப்பட்டிருக்கின்றது;

அவதாரணிகை

இனிரபரப்பிரமமென்னும்பதத்தைவிரிக்கின்றார்.

[illegible]

(இ—ள்) இனிஎதனாற்பரபிரம்மமெனப்படுகின்றான் எதனால்உச்சரிதமாத்திரையில் தானும்விருத்தியடைந்து (உச்சரிப்பவனையும)விர்த்தியடையச்செய்கின்றார் அதனால்பப்பிரம்மமெனப்படுகின்றார்

என்பது

(வி—ரை) விருத்தியடைகின்றார் = குடத்துக்குட்பட்ட ஓர்தீபம் குடமுடைந்தால் விருத்தியடைவதுபோலத் தோன்றுவதுபோல் பிரணவோபாஸகனும் உபாஸிக்குமுன்னர் அளவிலடங்கினவனைப்போலகப்பட்டாலும் பிரணவோபாஸனபலத்தால் ஸ்வரூபஞானமுண்டாகி எல்லாவற்றையும் வியாபிப்பானென்பதுஇதன்முடிந்தகருத்து;பரப்பிரம்மமென்றசொல்விசேஷணத்துடன்கூடியகாமதேயம் பரமென்பதுவிசேஷணம்பிரம்மமென்பது விசேஷியம். அதர்வசிரோபநிஷத்தில் தனித்தப்பிரம்ம சப்தமே பரமேசுவரனது திருநாமமாக நிரூபிக்கப்படுகின்றது ஆகையால பிரம்மம் ,பரப்பிரம்மம் இரண்டுபதங்களும் பரமேசுவரனிடத்தில் ரூடமென்பது வேதசம்மதமாய்முடிந்தது.

அவதாரணிகை

இங்ஙனம் பிரணவத்தில்,பெயர்களை வாசகத்தினபேதத்தவாச்சியத்தினிடம் நித்தியம் அனுஸந்தானம் செய்யவேண்டியதற்காகவாசகத்தின் பெயரை ஒருவாறு வாச்சியமின்றி

மாகவாச்சியனாகிய சிவ்னிடத்துப்பிரசித்தமான சில்நாமதேயங்களையும் வாசகத்திற்சேர்த்து முன்னர் பிரதிஞ்ஞைசெய்தபடி நிரூபிக்கத்தொடங்குகின்றார்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤 𑌏𑌕𑌃
𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌁𑌲𑍍𑌲𑍋𑌕𑌾𑌨𑍁𑌦𑍍𑌗𑍃𑌹𑍍𑌣𑌾𑌤𑌿
𑌅𑌜𑌸𑍍𑌰𑌂 𑌸𑍃𑌜𑌤𑌿
𑌵𑌿𑌸𑍃𑌜𑌤𑌿 𑌵𑌾𑌸𑌯𑌤𑌿 என்று

(இ—ள்) இனியேதனாலேகனென்னப்படுவானெவனெல்லாவுலகங்களையும் தம்முளொடுக்கிக்கொள்ளுகிறானெப்பொழுதும்சிருஷ்டிக்கின்றான் சங்கரிக்கின்றான் காக்கின்றான் அதனாலேயேயொருவனெனப்படுகின்றான் எ—று.

(வி—ரை) இதனிடத்து பரமேசுவரனுக்குள்தடஸ்த லக்ஷணம் குறிக்கப்படுகின்றது எல்லாவுலகங்களையும் என்பதாதியால், எல்லாவுலகங்கள் = திருசியப்பிரபஞ்சசாமானியம் தம்முளொடுக்கிக்கொள்வான் பூர்வப்பிரளயத்தின் இறுதியில் [என்பது பொருள். சிருஷ்டிக்கின்றான் = மீண்டும் அவ்வவ்வான்மாக்களின் கன்மங்களுக்கேற்றவாறு தனுகரணாதிகளைக் கொடுக்கின்றான் இதனால்நான்குதொழில்கள் சொல்லப்பட்டன இது ஐந்தாவது தொழிலுக்கு மூபலக்கணமே இதனால் பஞ்சகிருத்தியம் செய்பவன் ஏகனென்றாயிற்று.

அவதரணிகை

இனி ஏகருத்திரபதார்த்தத்தைக் குறிக்கின்றார்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤 𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃
𑌏𑌕𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯 𑌤𑌸𑍍𑌥𑍇𑌃 ।

ய இமாம்ல்லோகாநீஶத ஈஶநீபி:
ஜநநீபி:
ப்ரத்யங் ஜநாஸ்திஷ்டதி ஸஞ்சுகோசாந்தகாலே
ஸம்ஸ்ருஜ்ய விஶ்வா புவநாநி கோப்தா
தஸ்மாதுச்யத ஏகோ ருத்ர: ௭-ஐ

(இ—ள்) இனியெதனால் ஏகருத்திரனெனப்படுகின்றான் ஒருவனே உருத்திரன் அத்துவிதீயனாய் நின்றான். எவன் இந்தஉலகங்களை ஈசனிகளாலும் ஜநனிகளாலும் ஆளுகின்றான் ஜனங்களில் பிரத்தியக்ரூபனாய் இருக்கின்றான் அந்தகாலத்தில் ஸம்ஹரிக்கின்றான் ஸமஸ்தவுலகங்களையும்சேர்த்துரட்சிக்கின்றான். அதனாலேகருத்திரனெனப்படுகின்றான்.

(வி—ரை) ஏகருத்திரனென்றசொல்லுக்குப் பொருளுரைக்கவந்தஇச்சுருதி "ஏக ஏவ ருத்ர: ஒருவனே உருத்திரன் ய இமாம்ல்லோகாந் = எவன் இந்தஉலகங்களை ப்ரத்யங் ஜநா: = ஜனங்களுக்குள் பிரத்தியகாத்மா என்பதாதி மந்திரங்களையே பிரமாணமாக எடுத்தமையால் ஈசனது மஹாத்துவம் எல்லா வேதங்களுக்கும் ஸம்மதமெனமுடிந்தது ஒருவனே ஸஜாதீயவிஜாதீயனில்லாதவன். ருத்திரன் பரமேசுவரன் அத்துவிதியனாய் = சுகதபேதஹீனனாய் நின்றான் = தமது சொரூபத்தை வெளிப்படுத்தினான் இம்மந்திரத்தால் பரமேசுவரன் ஆதிசர்க்ககாலத்திலுள்ளவனென்றேற்பட்டது இரண்டாம் மந்திரம் சிருஷ்டிஸ்திதி கர்த்திருத்துவத்தைக்குறிக்கின்றது ஈசனிகளாலும்ஜனனிகளாலும் = உலகத்தைரட்சித்தற்குரிய சக்திகளாலும் உலகத்தையுண்டாக்குவதற்குரிய சக்திகளாலும் ஆளுகின்றான் = காக்கின்றான் இதனால்சிருஷ்டிஸ்திதிகர்த்துருத்துவங்கூறப்பட்டது. தன்னால்சிருஷ்டிக்கப்பட்டபொருள்களின் கண்தானே உட்பிரவேசிததானென்பதைக்குறிக்கின்றது மூன்றாம்மந்திரம் ஜனங்களில் என்பதாதியால் ஜனங்களில் = பிராணிகளில் பிரத்யக்ரூபனாய் = ஜீவசொரூபனாய் இருக்கின்றான் = பிரகாசிக்கின்றான் மேல்சங்காரசக்தியைக்குறிக்கின்றார் அந்தகாலத்திலென்பதால் அந்தகாலத்தில் = மஹாசங்காரகாலத

திலஸம்ஹரிக்கின்றான் = தம்முள்தாமேவற்றுக்கொள்ளுகின்றான்பி றகுபிரளயகாலத்தின் இலக்கணத்தைக்குறிக்கின்றார் ஸமஸ்தவுல கங்களையுமென்பதாறியால் ஸமஸ்தவுலகங்களையும் சேர்த்துரட்சி க்கின்றான் = தம்முளொடுக்கி இளைப்பாற்றுகின்றான் மேற்குறி த்தகாரணங்களால் வேதஸம்மதமாய் தடஸ்தலட்சணம்பெற்றி ருத்தலால் பரமேசுவரன் ஏகருத்திரனெனப்படுவான் என்றுவ ற்பட்டது ஏகனென்றும்ருத்திரனென்றும் பரமேசுவரனுக்குவெ வ்வேறுபெயர்களிருந்தபோதிலும் 'ஸாராஸக்த்த: விஷ்வஹூதேவா: அஷிப்யுக்ரு: அஜவனகவாஸ்,' என்டதாதிகளைப்போல விசே டிணத்துடன்கூடி இருசொற்களால் அமைந்த ஒருசிவநாம மேஇஃதாம்.

அவதரணிகை

இனிஈசானபதார்த்தத்தை உரைக்கின்றார்

அத கஸ்மாதுச்யத ஈசாந:
ய: ஸர்வாந்லோகாநீசத ஈசநீபி:
அபிஸ்வா சூர நோநுமோ
துக்தாஇவ தேநவ:
ஈசாநமஸ்ய ஜகத: ஸ்வர்த்ருசம்
ஈசாநமிந்த்ர தஸ்துஷ:
தஸ்மாதுச்யத ஈசாந: எ—று

(இ—ள்) இனியெதனால் ஈசானனெனப்படுகின்றான் எவ ன் இந்தலோகங்களை ஈசனிகளும் ஜனனிகளுமானபரமசக் திகளால் ஆளுகின்றான்,,ஓய்சூர பாலில்லாப்பசுக்களைப்போ ல் இவ்வுலகத்திற்கு நாதனும் சுவர்க்கத்தைக்காட்டுபவனும் உள்ளதற்கு இந்திரனுமான ஈசானனைத்தோத்திரம் செய்கி ன்றோம் ஆதலாலீசானனெனப்படுகின்றான் எ—து

(வி—ரை) ஈசானனென்னும் சொல்லுக்கு வியாக்கியானமா யிரண்டுமந்திரங்களையெடுத்தார் அவற்றில் ஒன்றுகர்மகாண்டத்

திலும் ஒன்றுஞானகாண்டத்திலும் எடுபட்டது எவன் இந்த லோகங்களையென்றமந்திரம் உபநிஷத்காண்டத்தில் உள்ளது. முன்னரேவியாக்கியானம்செய்யப்பட்டது இரண்டாம்மந்திரத்திற்குப் பொருளுரைப்பாம் ஒய்ரூர அவித்தியாஸம் ஹாரஸமர்த்த பாவில்லாப்பசுக்களைப்போல் = பாலுள்ளபசுக்களாயின் அதனை கோபாலன காப்பாற்றுவதுவழக்கம் பாலில்லாப்பசுக்களாயின் அவைகருணையால் இரட்சிக்கத்தக்கவை ஆகவேபிரயோஜனமில்லாத யாங்கள் உம்மைத்துதிப்பினும்நீர்கருணையால் எம்மையாளுவீரென்று பிரார்த்திப்பது இதன்கருத்து இவ்வுலகத்திற்கு = யாம்காணுமுலகத்திற்கு (அதாவது பூமிக்கு) நாதன் = ஏகேசுவரன் சுவர்க்கத்தைக்காட்டுபவனை ஸத்கர்மங்களைச்செய்பவர்களுக்கு உத்தமலோகத்தை யளிப்பவனை „ உள்ளதற்கு ஸமஸ்த பிரபஞ்சங்களுக்கும் இந்திரன் பரமேசுவரன் அதிபதி ஆகிய ஈசானனை ஈசானச்சொற்பொருளாய் எல்லாவேதங்களிலும் வழங்கும் பரமனை ஸ்தோத்திரம் செய்கின்றோம் = துதிக்கின்றோம் (என்பது)இதனால் தானொழிந்தமற்றயப்பிரபஞ்சங்களுக்கெல்லாம் பந்தமோட்சங்களையளிக்கும் ஸர்வசொதந்திரனை ஈசானன் இவனே யென்பது வேதத்தின் கருத்து

அவதரணிகை

இதுவரையில்கூறியஸ்வரூபதடஸ்தலட்சணங்கள்மாத்திரமேயன்றி ஷாட்குண்யம் முதலிய உத்தமகுணநிதித்வம் வேறிடங்களில் ஈசுவரனது இலக்கணமாகச்சொல்லப்படுதலால் அவ்வகளும்பரமேசுரனுக்கே உளவாமென நிரூபிக்கின்றார்.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] ௪—௫

(இ—ள்) இனி யிதனால் பகவானென்னப்படுகின்றார். எவன் எல்லா பாவங்களையும் காண்கின்றான் ஆத்மஞானத்தையறியச் செய்கின்றான் யோகத்தையுண்டாக்குகின்றான் அவனையதனால்பகவானெனப்படுகின்றான் ௪—௬

(வி—ரை) பாவங்களை = பலனை முதல் காரணமாய்க்கொண்டுண்டான பிரபஞ்சங்களை. காண்கின்றான் = சாட்சியாய் தெரிசிக்கின்றான். இதனால் ஸர்வஞ்ஞத்வம் சித்தித்ததென்க. ஆத்மஞானத்தை = பிரத்தியகாத்மஸ்வரூபமானஞானத்லைத. அறியச்செய்கின்றான் = தம்மடியார்களுக்கு எளிதில் அதனை யளிக்கின்றானென்பது பொருள். யோகத்தை = ஞானத்துக்கு அந்தரங்கசாதனமாகிய யோகத்தை. யோகமென்ற சொல் ஞானவைராக்கியங்களுக்கும்பலக்கணம். அங்ஙனே = சங்கிதைகளில்" [illegible] = ஓபகவ நமஸ்காரம் ஓபகவ முகங்களை வணங்கச் செய்,, என்பதாதி காணப்படுகின்றமையால் பிரம்ம கோடியில் வேறொருவர் பகவானென்ற சொல்லுக்குப் பொருளன்று என்றதாயிற்று- இதனையே ஹரதத்தாசாரியாரவர்கள் எடுத்துக் காட்டியதாவது. " [illegible] = ஓமஹேசுவர பெருத்ததோர் ஐசுவரியமுள்ளவர்களையாயினும், பெரும்புகழ்பெற்றவர்களையாயினும்; வீரர்களையாயினும், எல்லாப்பூமிக்கும் நாயகனும் அழகுடையவனுமான அரசனையாயினும் ஒவ்வொருவிஷயத்திலுமுலகத்திற் சிறந்தவராயிருந்தாலும் முனியோர் பகவான்களென்று வழங்குவதில்லை. மற்று ஞானவைராக்கியசம்பன்னர்களையே அங்ஙனம் வழங்குவார்கள். என்பது இங்கு ஐசுவரியவீரியாதிகளான குணங்கள் முன்னும்பின்னும் எடுத்துக்காட்டப்பட்டமையால் இங்கு ஷாட்குண்யமேவர்ணிக்கப்பட்டதெனவும் கொள்ளலாம். அல்லது ஆசிரியர் கூறியவாறு ஞானவைராக்கியங்களையே பிரதானங்களாகக் குறிக்கப்பட்டதென்றுமது பொருள்கொள்க.

அவதரணிகை

இனிமஹேசுவரபதார்த்தத்தைக்குறிக்கின்றார்.

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃
𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌲𑍋𑌕𑌾𑌨𑍍𑌸𑌂𑌭𑌕𑍍𑌷𑌃 𑌸𑌂𑌭𑌕𑍍𑌷𑌯𑌤𑌿
𑌅𑌜𑌸𑍍𑌰𑌂 𑌸𑍃𑌜𑌤𑌿 𑌵𑌿𑌸𑍃𑌜𑌤𑌿 𑌵𑌾𑌸𑌯𑌤𑌿
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌮𑌹𑍇𑌶𑍍𑌵𑌰𑌃 (எ—ரு)

(இ—ள்) இனி யெதனால் மஹேசுவரனெனப்படுகின்றான். எவர்ஸர்வசங்கார மூர்த்தியாய் எல்லாலோகங்களையும் பட்சிக்கின்றார், ஓயாது சிருஷ்டிக்கின்றார். ஸங்கரிக்கின்றார் காக்கின்றார். ஆதலால் மஹேசுவரனெனப்படுகின்றார். எ—அ

(வி—ரை) சர்வசங்காரமூர்த்தி = மஹாப்பிரளயகாலத்தில் பிரம்மாதி எல்லாப்பிரபஞ்சங்களையும் தம்முள் ஒடுக்கிக்கொள்ளும்மூர்த்தி; மற்றவை முன்னரேவியாக்கியானம்செய்யப்பட்டன

அவதாரணிகை

இனி மஹாதேவபதார்த்தத்தைக்குறிக்கின்றார்

𑌅𑌥 𑌕𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃
𑌯𑌸𑍍𑌮𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌭𑌾𑌵𑌾𑌨𑍍𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌜𑍍𑌯
𑌆𑌤𑍍𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌗𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑍇 𑌮𑌹𑌤𑌿 𑌮𑌹𑍀𑌯𑌤𑍇
𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌃॥ எ—ரு

(இ—ள்) இனி யெதனால் மஹாதேவனெனப்படுவான். எவன் எல்லா பாவங்களையும் விட்டு பெருத்தஆத்மஞானயோகைசுவரியத்தில நிலைபெற்றிருக்கின்றான். அதனால் மஹாதேவனெனப்படுகின்றான்.

(வி—ரை) வேறு தேவதைகளெல்லாம் அளவுள்ள ஆனந்தத்தையடைந்து இருப்பதனாலையால் அவர்களையொழித்து தேவதையாகிய பரமேசுவரனொருவனே அளவிலானந்தமாகிய ஆத்துமானந்தத்தில் நிலைபெற்றவனெனக்குறிப்பித்து முமுட்சுக்கள் வேறு தேவதைகளைப் பணிந்து [illegible] பொருக்காமல்சிவஞானத்

தாலுண்டாகும் ஆத்துமானந்த நிஷ்டையை பிரகரணத்தினிறுதி யில் வைத்து நிரூபித்தருளினுனென்க.

அவதரணிகை

இனி பிரணவத்தின்மேலேற்றிஇம்மஹிமைகள் சொல்லப்படினும்அவையெல்லாம் அதற்குப்பொருளான பரமேசுவரனிடத்தே சேர்க்கற்பாலனவேயன்றி, வேறிலையெனவுண்மையை உபசங்கரிக்கின்றார்.

(ததேதத் ருத்ரஸ்ய சரிதம்)

(இ—ள்) அந்த இதெல்லாம் உருத்திரனுடைய சரித்திரம். எ—று

(வி—ரை) அந்த இது=இனியெதனால் ஓங்காரனெனப்படுவானென்று தொடங்கியதுமுதல் இதனால் மஹாதேவனெனப்படுவானென்பது வரை. அல்லது; இவ்வுபநிடதம் தொடங்கியதுமுதல் இதுவரை. உருத்திரனுடைய சரித்திரம்=பரமேசுவனது மஹிமை. இதனால் இதுவரை நிருபிக்கப்பட்ட ஸர்வ, ஷட் சனங்களுக்கும் பரமேசுவரனது செரூபத்தைப்பற்றினவேயென்றாயிற்று. ஆதலாற்றான் இனியெதனால் ஓங்காரமெனப்படுவான் என்பதுதொடங்கி எல்லாவற்றையும் சிவபரமாகவேயாம்வியாக்கியானம்செய்வோம்.

அவதரணிகை

மேற்குறித்தபெருமைகட்கு ஹேது ஈதெனக்குறிப்பாளாய்வேதநாயகிபகவானைத் துதிக்கின்றாள்.

ஏஷ ஹி தேவ: ப்ரதிஶோ நு ஸர்வா:
பூர்வோ ஹி ஜாத: ஸ உ கர்பே அந்த:
ஸ ஏவ ஜாத: ஸ ஜநிஷ்யமாண:
ப்ரத்யங் ஜநாஸ்திஷ்டதி விஶ்வதோமுக: எ-து

(இ—ள்) இந்த தேவனே எல்லாத்திக்குகளிலுமுள்ளவன் முன்னும் உள்ளவன்; கெர்ப்பத்துள்ளும் நிற்பான் இவனே பிறந்தவன்; இவனே பிறக்கப்போவான் ஜனங்களின் பிறத்யகாத்துமாவாயும் எங்கும் காண்பானும் இருப்பான். எ—து

(வி — ரை) சவேதாசுவதர ஸூக்தத்தில் இம்மந்திரம் விரிவாய் வியாக்கியானம் செய்யப்பட்டுள்ளது. அதர்வசிரோபாஸ்கரம் என்ற விரிந்தநூலில் பலப்பிரகரணங்கள் இதனுரையாய் அமைந்தன, அதன்சங்கிரகமாவது:— இந்தஉருத்திரனென்ற தேவன் யாம்காணும்சர்வபிரபஞ்சங்களையும் ஆதிகாலத்தில் சிருஷ்டித்து அவற்றுள் தாம்பிரவேசித்து ஸதஸதாத்யனிர்வசனீயாத்தப் பிரபஞ்சங்களுக் கதிஷ்டானமாய் ஸர்வலயஸ்தானமாயுள்ளவன் என்பது வேதாந்தங்களுக்கு ஸம்மதமென்பதே.

அவதரணிகை

இங்ஙனம் வேறுசிலமந்திரங்களையும் வேறுவேதங்களின் அர்த்தங்களுடைய ஒற்றுமைக்காககாட்டுகின்றார்.

விஶ்வதஶ்சக்ஷுருத விஶ்வதோமுகோ
விஶ்வதோபாஹுருத விஶ்வதஸ்பாத்|
ஸம்பாஹுப்யாம் தமதி ஸம்பதத்ரை
ர்த்யாவாபூமீ ஜநயந் தேவ ஏக:|| எ—று

(இ—ள்) எங்குங்கண்ணுள்ளான் எங்கும்முகமுள்ளான் எங்கும்கையுள்ளான் எங்கும்காலுள்ளான் கைகளால் எல்லாவற்றையும் சேர்ப்பான். பக்ஷிகளுடன்சேர்ப்பான். ஒரே தேவன் எல்லாஉலகங்களையும் சிருஷ்டிப்பவன் அவனேயாம். எ—து

(வி—ரை) கைகளால் = பாஹுப்யாம் தமதி = உனதுகைகளுக்குநமஸ்காரம் என்றாதி வேதங்களால் குறிக்கப்பட்ட பிரவிருத்தி நிவிருத்திகளென்ற ஜீவதர்மங்களால்; எல்

ஙாவற்றையும் = பலவகைவேற்றுமைகளை யடைந்த ஜீவகோடிக ளை; சேர்ப்பான் = தநுகரணபோகங்களுடன் கலக்கச்செய்வான் அ வைகளுக்கேற்றவாறு அவனது தொழிலைக்கூறுகின்றார் எல்லாவு லகங்களையும் சிருஷ்டிப்பவன் என்று. அவன் சிருஷ்டிஸாமர்த்தி யமுள்ளவனாதலால் சர்வகர்மங்களுக்கும் பயனைக் கொடுப்பவ னென்றேற்பட்டது. பட்சிகளுடன் சேர்ப்பானென்றவிடத்துப்ப ட்சிகளென்பது திர்யக்யோனிகள்மேனின்றது தன்னை அனன்னி யமாக வழிபட்டவர்களுக்கு பாசவிமோசனம் செய்விப்பவன் அ வனேயென்பதும், மற்றுமுள்ளபலபொருள்கள் ஸர்வசர்திரப்ராவிடு யத்திலும் அதர்வசிரோபாஸ்கரத்திலும சுவேதாசுவதரவ்ருணிகா திகளிலும் எம்மால் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன அவைகளையங் கேகாண்க.

அவதரணிகை

இவ்விசிவோபாஸ்தியை நிரூபிக்கின்றார்

௬௨-வாவிகவ் என்று

(இ—ள்) அந்த இதனையுபாஸிக்கவேண்டும் எ—று

(வி—ரை) அந்த = பிரணவத்துடன் அபேதமாக அதன் சொ ரூபமாய் உபாசிக்கவேண்டுமென்று தொடர்ந்து நிரூபிக்கப்பட்டப ல்வகை மகிமை பொருந்திய. இதனை = மான், மழு, முக்கண் மலைமங்கைபாகம் முதலிய வேடோக்தவிலக்கணம் பொருந்திய சிவசொரூபமான ஸவிசேஷபிரம்மத்தை உபாசிக்கவேண்டும். கை வல்லியம் சுவேதாசுவதரம் அதர்வசிரஸ் அதர்வசிகை காலாக்கினி ருத்திரம் இதுபோன்ற உபநிடதங்களில் நிரூபித்தவாறு தத்தம்வர் ணங்களுக்கும் ஆசிரமங்களுக்கும் ஏற்றவாறு வழிபடவேண்டும் மு முட்சுவென்றுள எழுவாயொன்றையருவித்துக்கூட்டுக.

அவதரணிகை

அதன் பிரமாணத்தைக் கூறுகின்றார்

வாஹ ௦ தி ॥ என்று

(இ—ள்) வாக்குகள் சொல்லுகின்றன. எ—று

(வி—ரை) வாக்குகள் = வேதாதிகள். மூலத்தில் வாக்கென்று ஒருமையாற் குறித்தது எல்லா வேற்றுமைகளுக்கும் எழுவாய் ஒருமையே குறிப்பாகலாமென்று பொருள் கொடுக்கும்; [illegible] என்ற சூத்திரத்தால் லக்ஷணமமைதலால். சொல்லுகின்றன வென்றால் விதிக்கின்றனவென்பது பொருள். இதனால் இவ்வுபனிடதம் சிவோபாசனத்தை விதித்து மற்றைய உபனிடதங்களையும் அப்பொருளிலேயே உபசங்கரிக்கின்றதென்றதேற்பட்டது.

அவதாரிகை

அதன் சொரூபத்தைக் குறிக்கின்றார்.

[illegible] ॥ என்று

(இ—ள்) அஃது உள்ளே அறியத்தகுந்தது. எ—று

(வி—ரை) அது = முன்னே நிரூபிக்கப்பட்ட வழிபாடும் வழிபடத்தக்க சொரூபமும். உள்ளே = இதயகுஹரத்தில் அதாவது தஹரகோசத்தில், அவ்விடமே ஸாக்ஷாத்பரமேசுவரனை தியானிப்பதற்கு யோக்கியமான இடமெனவும், அதில் வழிபடும் முறையீதெனவும், மேலே நிரூபிக்கப்போகின்றார். ஆதலால் மற்றைய எல்லா வித்தைகளிலும் தஹரோபாஸ்தி மிகச் சிறந்ததென்பது இதன் கருத்தாகின்றது. அறியத்தகுந்தது = தியானிக்கத்தகுந்தது, வழிபடத்தகுந்தது.

அவதாரிகை

மேலே குறிக்கப்போகின்ற தஹரமென்ற திவ்யஸ்தானத்தில் பிராணவாமின்ன சிவோபாஸனமானது மிகச்சிறந்ததாமென முன்னர்த்தவாதநியாயத்தால் துதிக்கின்றார்.

[illegible]

[illegible] ।

யெநவீதா:ப்ராவந்நாவம்கி
வாஙவெடிவாராயணமிஜதி என்று

(இ—ள்) இந்த வழி உத்தரபாகத்தில் விரித்திருக்கின்
றது. எதனால் தேவர்கள் எதனால் ரிஷிகள் எதனால் முனிவ
ர்கள் பரமபதமாயும் பராயணமாயுமுள்ளதைப் பெறுகின்
றார்கள். எ—று.

(வி—ரை) இந்தவழி = இங்கு நிரூபிக்கப்பட்ட சிவோபாஸ
னமார்க்கம். உத்தரபாகத்தில் = வேதத்தின் உத்தரபாக மெனப்ப
ட்ட உபநிஷத்காண்டத்தில். விரித்திருக்கின்றது = பெரும்பான்
மையிலவையெலாம்சிவோபாஸனத்தையேவிதிக்கின்றமையால் அத
த்தகைய பெருமைபொருந்திய பொருள்யாதென வினாநிகழ அத
னையோதியுணர்த்துகின்றார். பரமபதமும் பராயணமுமென்று.
பரமபதம் = ''தத்விஷ்ணோ: பரமம்பதம்ஸதா பஸ்யந்தி ஸூரய:'' — அங்குநின்
வடிவேஸாதிஹமெரொ: தத்விஷ்ணோ:வாஙமெம்வடிம்
தப்பெரும்புகழ்பெற்ற நாராயணனது பரமபதம் விளங்குகின்ற
து. அந்த விஷ்ணுவினுடைய பரமபதத்தை சூரிகள் காண்கின்
றார்கள். என்பதாதி சுருதிகளில் நிரூபிக்கப்பட்ட பரமபதமென
ப்படும் ஸ்ரீவைகுண்டம் முதலியஸ்தானங்கள். 'கங்கையின்கண்
இடைச்சேரி' என்றவிடத்து கங்கையென்றசொல் இடத்தைக்கு
றிக்கும் சொல்லாகவமைக்கப்பட்டமையின், அதனிடத்தமைந்த
குளிர்ச்சிபாவனத்துவம் முதலிய நற்குணங்களை அதனுடைபொரு
ளாய நீரத்தின் கண்ணது சேர்ப்பதுபோல, ஈண்டுபரமபதமென்
றசொல்லும் ஆகுபெயராய் அதன் செம்பொருளான பரமேசுவ
ரனிடத்தமைந்த ஸர்வப்பிரம்மகுணங்களையும் பரமபதநாதனான
பங்கஜாட்சனிடத்தமைத்து அவனை சிவரூபனாக பாவிக்கவேண்டு
மென்று குறித்ததாயிற்று. பராயணம் பரையென்ற பராசக்தி
யார்க்கு அயனம் அதிட்டானமாம். 'பராஸ்ய சக்திர் விவி
தைவ ஸ்ரூயதே ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச' —
இவரது பரையென்ற சக்தியானது பலவகை கேட்கப்படுகின்றது;
இயல்பிலமைந்தது, ஞானசக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி'' என்
பதாதி வேதங்களில் வித்தையவித்தையென இருவகைப்பட்ட

பிரகிருதிகளும், பரையென்றசொல்லுக்குப் பொருளாயமைந்ததா ல் அதற்கு இடமென்றதனால், அதனால் தோன்றியஜடஜீவேச்வர பிரபஞ்சங்களுக்கதிட்டானமென்றேறப்பட்டது; ஆகவே பரமபத மென்றசொல்லில் ஸவிசேஷமுக்தி ஏதுவாகிய தடஸ்தசொரூபமு ம், பராயணமென்ற சொல்லில் நிர்விசேஷமான சொரூப லைக்ஷ ணியமும் சூசிக்கப்பட்டதாகும். இவ்வுபயவிலக்கணங்களுமமை ந்தசொரூபம் இம்மந்திரத்தில் வழிபடத்தக்கதாக நிரூபிக்கத்த க்கதோன்றும்.

அவதரணிகை

இனிமுன்குறித்தவழிபாட்டையேவிரிவாய்க்குறிக்கின்றார்

வாலாக்ரமாத்ரம் ஹ்ருதயஸ்ய மத்யே
விச்வம் தேவம் ஜாதவேதம் வரேண்யம்
தமாத்மஸ்தம் யேநுபச்யந்தி தீரா:
தேஷாம் சாந்தி: சாச்வதீ நேதரேஷாம். என்று

(இ...ள்) மயிரின் முனையளவு இதயத்தின் மத்தியில் சர்வசொரூபனாய் அக்கினிரூபனாய் வரேண்யனாய் அமைந்த அவனை ஆன்மாவினிடத்தேயுள்ளவனாக எந்ததீரர்கள் காண் கின்றார்களோ அவர்களுக்கு சாசுவதமான சாந்தியுண்டு மற் றவர்களுக்கில்லை

எ...று

(விரை) மயிரின் முனை = ஜீவஸ்ய விஜ்ஞேய: ஸசாநந் த்யாய கல்பதே|| ஓர் மயிரின் முனையின் நூற்றிலொருபங்கை மீண்டும் நூறாகச்செய்தால் அதன் அம்சமே ஜீவனாகக்காணுவான் அதன் சர்வ சொரூபனுமாவான் என்றெழுந்த வேதாந்த வாக்யங் களுடன் முரணாது இதைபொருள்படுத்துங்கால் முனையென் றுசொன்னதற்கு ஓர்சிறுகூறு என்றேபொருள்கொடுக்கவேண்டும் இதயத்தின் ஐந்துதுளைகளுடன் சென்னிரமம்மையமாம் ஸவிண் டமாய்த்தோன்றும் இதயகோசத்தின் ஸர்வசொரூபன் என்பதுவெ ளி. அக்கினிரூபன் = அதாவது வேகத்தால் ஓர்சிறியநெருப்பின்

ஞ்யாலேபோல் பாவிக்கும்படிவிதிக்கப்பட்டமையால் வரேண்ய
ன் = இதனால்ஏகதேசாநுவாதமுகமாய் காயத்திரியின்பொருளாய
மைந்தவன் அவன் = ஸர்வப்பிரசித்தனானவன் அதாவதுமுன்னே
நிரூபிக்கப்பட்டருத்திரமூர்த்தி; ஆன்மாவிடத்தேயுள்ளவனாக = ஆ
ன்மாவிடத்துமந்தர்யாமியாகஉட்பிரவேசித்தவனாக அந்ததீரர்கள்
குருகுலவாசம்செய்து வேதாந்தவிசாரத்தால் த்ருடநிச்சயமுள்ள
பெரியோர்கள்; காண்கிறார்கள் = இடையறாதுதியானிக்கின்றார்கள்
சாசுவதமானசாந்திமோட்சசுகம். மற்றவையெல்லாம் அசாசுவதமா
கையால்; மற்றவர் = குருகுலவாசவேதாந்த விசாரத்திலாஞ்ஞானி
யர்கள்; இல்லை = மோட்சமில்லையென்பதுமாத்திரமில்லை; மற்றஅதோ
கதியுண்டென்பது மிதன்பொருள். இதனால் சிவஞானமேமோ
ட்சசாதனமென்றும் அஃதிலார்க்கு எத்தனை ஜன்மங்களிலும்
மோட்சமில்லையென்றேற்பட்டது.

அவதாரணிகை

இனிமுன் நிரூபித்தபொருளையே வேறுவழியால் காட்டு
கின்றார்.

𑌯𑍋 𑌯𑍋𑌨𑌿𑌂 𑌯𑍋𑌨𑌿𑌮𑌧𑌿𑌤𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌯𑍇𑌕𑌃
𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌿𑌦𑌂 𑌸𑌂 𑌚 𑌵𑌿 𑌚𑍈𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 |
𑌤𑌮𑍀𑌶𑌾𑌨𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌦𑍇𑌵𑌮𑍀𑌡𑍍𑌯𑌂
𑌨𑌿𑌚𑌾𑌯𑍍𑌯𑍇𑌮𑌾𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌮𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌮𑍇𑌤𑌿 ... என்று

(இ...ள்) எவன் ஒவ்வொருயோனியையும் ஏகனாய்அ
திட்டிக்கின்றான், எவனிடத்து ஐந்து விதமான இவையெ
ல்லாம் இருக்கின்றன ஈசானனும் வரதனும் புகழத்தக்கவ
னுமான ஸர்வஸம்ஹார்த்தாவான ருத்திரமூர்த்தியை தியா
னிப்பவர் சாசுவதமான சாந்தியையும்பெறுவர். எ...று.

[வி—ரை) இம்மந்திரத்தை சுவேதாசுவதரவுபனிடதமும்
சிலசொற்களை மாற்றிப்படித்திருக்கின்றது ஒவ்வொருயோனி
களையும் = காலாத்துமாதிசஹிதங்களான ஸமஸ்தகாரணங்களையும்

ஏகனாய் அதிட்டிக்கின்றான் அவனின்றி வேறு நிமித்தகாரணம் அவைகளுக்கில்லையாதால் இனி யவனே எல்லாவற்றிற்கும் உபாதானமுமென்கின்றார் எவனிடத்துஎன்பதாதியால். ஐந்துவிதமான = பஞ்சபூதங்களின் பரிணாமமான இவையெல்லாம் = காண் பொருளனைத்தும். இருக்கின்றன = மண்ணின்கண் குடமுதலியவையமைந்தாற் போலமைந்திருக்கின்றன ஈசானன் = எல்லாப்பூதங்களுக்கும் நியந்தா. வரதன் = கன்மங்களின்பயனளிப்பவன் தேவன் = பிரகாசஸ்வரூபன் புகழத்தக்கவன் — ஸமஸ்தவேதங்களாலும் நமஸ்காரத்தை முன்னிட்டு ஸ்துதிக்கப்படுகிறவன் ஸர்வஸம்ஹார்த்தா = வேதங்களிற்சொன்னஸம்ஹாரஸன் ருத்திரமூர்த்தியை = மேற்கூறியவிலக்கணமமைந்தஸவிசேஷப்பிரம்மசொரூபத்தை தியானிப்பவர் = முன்மந்திரத்திற்குறித்தபடி இடையறாது அவனை தாமெனநிதித்தியாஸனம் செய்பவர் சாசுவதசாந்தியை = மோட்சத்தை பெறுவர் எல்லாம் பிரம்மமென்ற உறுதியுடன் தியானம் செய்கின்றவர்க்கே முக்தியென்பது இம்மந்திரத்தின் முடிந்தகருத்து. ஸர்வசம்ஹாரமென்பதுபிரம்ம லட்சணமென்று "அத்தா" என்றசூத்திரத்தில் ஆசிரியர் வியாசர் நிரூபித்தாரென்றறிக.

அவதரணிகை

இனி நிதித்தியாஸனத்தை அங்கங்களுடன் சுருக்கிவிரிக்கின்றார்.

ப்ராணேஷ்வந்தர் மனஸோ லிங்கமாஹு:
யஸ்மின் க்ரோதோ யா ச த்ருஷ்ணா க்ஷமா ச ।
த்ருஷ்ணாம் சித்வா ஹேதுஜாலஸ்ய மூலம்
புத்த்யா ஸஞ்சிந்த்ய ஸ்தாபயித்வா து ருத்ரே ॥ என்று

(இ—ள்) பிராணன்களுக்கு நடுவே மனதுக்குள்ளே லிங்கமுண்டென்பார், எதனிடத்துக்கோபம், ஆசை, பொறுமை இருக்கின்றன. ஹேதுக்கூட்டங்களுக்குமூலமான ஆசையைக்களைந்து புத்தியால் ஆலோசித்து தியானித்து ருத்திரனிடத்திலமைத்து. எ—து

(வி—ரை.) இவ்விதம் தியானித்து முற்கூறிய பயனைப் பெறுவாரென்று முன்வாக்கியத்துடன் இவ்வாக்கியத்தைக்கூட்டுக. இவ்வாக்கியத்தின் சில்சொற்களைமேல்வாக்கியங்களும் அவாவிநிலை கொண்டு அவாவிநிற்றலால்இஃது இடைநிலைத்தீபம்போல்இருபுறம் சேருமென்க-பிராணன்கள்=பிராணனென்றசொல்இந்திரியாதிகளுக்கும்குறிப்பே. அதாவது ஸ்தூலசரீரத்திற்கு.மனஸ்என்பதுகுக் குமத்தைக்குறிப்பதுலிங்கமென்பதற்குப்பொருள்லிங்கசரீரமென்பது பிராணாதிகள் அந்தக்கரணத்தைவிட்டுப்பிரியாமையின் அவ்வந்தக்கரணம் ஸர்வவாஸனுரூபமாதலாலும் லிங்கசரீரம் பிராணாந்தக்கரணங்களின் வேறாயினும் அதுபிராணாதிகளைவிட்டொழியாதிருக்குமந்தக்கரணத்திலிருப்பதாய்ச்சொன்னது குறையன்றென்பது இம்மந்திரத்தின்கருத்து. இங்ஙுலிங்கமெனக் குறிக்கப்பட்டவாசனுரூபமான அந்தக்கரணத்தில் கோபம்=தாம்கருதியவிஷயத்தைத்தம்மிடம் அணுகவொண்ணாது செய்த எதுவின்னிடத்துக ன்மத்தாலாவது மனதாலாவது வாக்காலாவது அனிஷ்டத்தைச் செய்யவேண்டுமென்ற எண்ணத்தால் தோன்றும் குணம். ஆசையென்பதுவெளி எனக்குஇப்பொருள் வேண்டுமென்பதாதி குணம் பொறாமை வெளி. இவை மற்றகோபாதிகளுக்கு முபலக்கணம் குறித்த ஆசைஸமஸ்தமான துக்கஹேதுக்களின் தொகுதிக்கு காரணமாம். துலைத்து=ஞானத்தால் நிவிர்த்திசெய்து; விர்த்தியினல்=அந்தக்கரணத்தின் இச்சையென்ற விருத்தியினல். சாஸ்திரத்தாலே ஆலோசித்து ஆத்துமாவினிடத்திருக்கும் ஆசையொழிவதற்காக நிலைநிறுத்தி ஆத்துமசொரூபனும் ஆனந்தகனனுமான ருத்திரமூர்த்தியினிடத்துருசிவபக்தைக்கியதோகுதியானிப்போர் முக்தியடைவார் என்று முன்மந்திரத்துடன் கூட்டுக. இதனல்யோகத்தாலீசுவரனை டஜிப்பவர்களுக்கு மோட்சமே பலமென்பது இதனல் புலப்பட்டது.

அவதாரணிகை

இனி மோட்சமேமுக்கியபலனென்று ருத்திப ஜனதிற்கு நிரூபிக்கப்பட்டமையால் அந்த மோட்சத்தின்சொரூபம் யாதென நிகழ அதனை நிரூபிக்கின்றார்.

[Sanskrit verse in Grantha script] — என்று

(இ—ள்) ருத்திரனொருவனேயாமென்பர். (எ—து)

(வி—ரை) ருத்திரன் = சூரித்தவிலக்கணமுடைய ஸர்வா த்துமாவும் ஸர்வாந்தர்யாமியும் சாந்தனும் சாந்திமையக்கொடுப்பவனும் பிரத்தியக்ரூபனுமான ருத்திர மூர்த்தியை; ஏகன் = உலகெலாமொழிந்த உண்மைஸ்வரூபனென்றும் முக்தி ஸ்வரூபனென்றும் பெரியோர் கூறினர். இதனால் சிவனுடனைக்கியமடைவது முக்தியென்றேற் பட்டது.

அவதரணிகை

இனி இவ்விதமான சாசுவதசாந்திரூபமானமோட்சத்தைக் கொடுக்கும் சிவாத்வைதவித்தைக்கு ஸாதனம் கர்மம்முதலியான வேதங்களிற் சம்ஹிதைகளிற் சொல்லப்பட்டன. அவைகேளில்ஞானத்தையுண்டாக்கும் கருவியாகாவாதலின் தியானவிசேஷரூபமும் மோட்சசாதனமும் பசுவின் பாசத்தை முற்றும் தொலைப்பதுமான திவ்யபாசுபதசொரூபத்தை நிரூபிக்கின்றார்—

[Sanskrit verse in Grantha script]

[Sanskrit verse in Grantha script]

[Sanskrit verse in Grantha script] என்று

(இ—ள்) சாசுவதனும் புராணனும் அன்னாசரூபனும் பலரூபனும் இருக்கும் ருத்திரனை தியானவிருத்தியால் மனதில் தனைபச்செய்வது இந்தபாசுபதவிரதமாம். (எ...து)

(வி—ரை) சாசுவதன் = ஸத்தியசொரூபன் அதாவது உண்மைப்பொருளாயுள்ளவன். புராணன் = எல்லாவற்றிற்கும் காரணபூதனாயுள்ளவன். அன்னசரூபன் = ஸர்வப்பிராணிகளுக்கும் பிராணனாயுள்ளவன்; பலரூபன் = ஸ்வரூபசத்தாய்நிற்பவன். ருத்திரன் = தொண்டர்களின் தியானத்துக்காக நானாவிதமான திருமேனிகளைத்தாங்கியவன். தியானத்தால் = தன்ததால் அவனே தானென்ற இடைபறாத நினைவே இங்கு தியானமெனப்பட்டது. மனதில்

தகையச்செய்வது = வெளி. பலவிதகாரணங்கள் பரமேசுவரதி யானுனுவிர்த்திக்கு இருந்தாலும் இந்தவிரதத்தைப்போல் அவ்வளவு பரமாந்தரங்கசாதனம் வேறில்லையென்பது வேதத்தின் கருத்து. பாசுபதம் = பசுபதியை தேவதையாய்ப்பெற்றவிரதம். இதனையே சிரௌதபாசுபதமென்பர் பௌராணிகர்.

அவதரணிகை

இந்தசிரௌதபாசுபதவிரதத்தை அனுஷ்டித்து சித்தியடையஉத்தேசிக்கும் பரமபுருஷனுக்குபரமபாவனமான பாஹியபாசுபதவிரதத்தையும் உபதேசிக்கின்றார்

அக்நிரிதி ப⁴ஸ்ம
வாயுரிதி ப⁴ஸ்ம
ஜலமிதி ப⁴ஸ்ம
ஸ்த²லமிதி ப⁴ஸ்ம
வ்யோமேதி ப⁴ஸ்ம
ஸர்வம் ஹவா இத³ம் ப⁴ஸ்ம
மந ஏதாநி சக்ஷூம்ஷி ப⁴ஸ்மாநி
அக்நிரித்யாதி³நா ப⁴ஸ்ம க்³ருஹீத்வா
தஸ்மாத்³ வ்ரதமேதத் பாஶுபதம் என்று

(இ—ள்) அக்கினியென்பது பஸ்ம, வாயுவென்பதுபஸ்ம, ஜலமென்பதுபஸ்ம, ஸ்தலமென்பதுபஸ்ம, ஆகாயமென்பதுபஸ்ம, எல்லாமல்லவோ இந்தபஸ்ப, மனமென்பதாதியான கண்களும் பஸ்ம, அக்கினியேயென்பதாதியால் பஸ்மத்தைக்கிரகித்ததுஉடம்பைத்துடைத்துத்தரிக்கவேண்டும்ஆதலால் இந்தவிரதம் பாசுபதமாம்

(வி—ரை) அக்கினி யென்பதாதி ஏழுமந்திரங்கள் அதர்வண வேதத்தில் குறிக்கப்பட்டன இவைபஸ்மதாரணத்தில் உபயோகப்பட்டன பஸ்மமேஸர்வரூபமென்பதைநிரூபிக்கின்றன அக்கினி வாயு ஜலம் ஸ்தலம் (பிருதிவீ) ஆகாயம் இவை ஐந்து பூதங்கள்

ன்லா மென்பது அப்பஞ்சபூதகாரியங்களும் அவற்றின் காரணமான தன் மாத்திர முதலியதுமாம். மனமென்பதாதி கண்கள் = காண்பதற்குக் கருவியாயுள்ள இந்திரியங்களை கண்களெனக் குறிக்கப்பட்டன பஸ்மமானது சிவாக்கினிசொரூபமானதால் அதுசர்வ சொரூபமாக ஸ்தோத்திரம் செய்யப்பட்டது அக்கினி ஹோத்திரத்திலாவது விரஜாக்கினியிலாவதுஉண்டான பஸ்மத்தையாவது மற்ற வேறுவிதமான வேதாந்தரங்களிற் சொன்ன பஸ்மத்தையாவது அக்கினி யென்பதாதி எழுமந்திரங்களால் கிரஹித்து உடம்பை காலாக்கினிருத்திரோபனிஷத்து முதலான விடங்களிற் சொல்லப்பட்ட சிரசு முதலிய இடங்களைத் துடைத்து உத்தூளனம் அவகுண்டனம் என்று இருவகை தாரணம் செய்து தரிக்கவேண்டும் = திருபுண்டரத்தை தரிக்கவேண்டும் இதுவும்பசுபதியை தேவதையாக உடைத்தானமையால் பாசுபத விரதம் எனப்படும் இதையும் சிரௌதபாசுபதமென்று புராணங்கள் விளக்கும் இதனால் வைதிக சம்பிரதாய சித்தமான பிரணவா பின்னசிவோபாஸ்தியும்வைதிக பஸ்மதாரணமும் ஒன்றுக்கொன்று பகாரகமாய் மோட்சசாதகமாமென்று சித்தித்தது

அவதாரணிகை

இனிபாசுபத விரதத்தின் பயனைக் குறிக்கின்றார்,

வஶுவாஶவிமொக்ஷாய. என்று.

(இ—ள்) பசுக்களின்பாசம் தொலைவதற்காக.

(வி—ரை) இங்குபசுக்களென்பவர் இவ் விரதங்களையனுஷ்டிப்பதுடன் பக்தர்களாயும்முமுட்சுக்களாயுமுள்ளவர்கள்பாசம் = அவித்தை-தொலைவது= வீடுபெறுவது என்பது பொருள்.

அவதாரணிகை

இனிஉபநிடதத்தைப்படிப்பதாலுண்டாகும் பயனைக்குறிக்கின்றார்.

யோऽதர்வசிரஸம் ப்ராஹ்மணோ
அதீதே ஸோऽக்நிபூதோ பவதி.
ஸ வாயுபூதோ பவதி
ஸ ஸூர்யபூதோ பவதி
ஸ ஸோமபூதோ பவதி
ஸ ஸத்யபூதோ பவதி
ஸ ஸர்வபூதோ பவதி
ஸ ஸர்வைர்தேவைர்ஜ்ஞாதோ பவதி
ஸ ஸர்வைர்வேதைரநுத்யாதோ பவதி
ஸ ஸர்வேஷு தீர்த்தேஷு ஸ்நாதோ பவதி
ஸ ஸர்வைர்வைர்வேதைர்ஜ்ஞாதோ பவதி
ஸ ஸர்வைர்யஜ்ஞக்ரதுபிரிஷ்டவான் பவதி
தேனேதிஹாஸபுராணானாம் ருத்ராணாம்
ஶதஸஹஸ்ராணி ஜப்தானி பவந்தி
ப்ரணவானாம் ஸஹஸ்ரம் ஜப்தம் பவதி
ஆ ஸப்தமாத் புருஷயுகான் புநாதீத்யாஹ
சக்ஷுஷ: பங்க்திம் புநாதி
இத்யாஹ பகவானதர்வசிர:
ஸக்ருஜ்ஜப்த்வைவ ஶுசி: ஸ பூத: கர்மண்யோ பவதி
த்விதீயம் ஜப்த்வா கணாதிபத்யமவாப்நோதி
த்ருதீயம் ஜப்த்வைவமேவானுப்ரவிஶதி
ஓம் ஸத்யம் ஓம் ஸத்யம் இதி

(இ—ள்) எந்தப்பிராம்மணன் அதர்வசிரஸைநித்தியம் அத்தியயனம் செய்வானோ, அவனக்னிபூதனாவான். அவன் வாயுபூதனாவான். அவனாதித்திய பூதனாவான். அவன் ஸோம பூதனாவான். அவன் ஸத்திய பூதனாவான். அவன் ஸர்வபூதனாவான். அவன் ஸர்வதீர்த்தங்களிலும் ஸ்நானம் செய்தவ

ஞவான். அவன் ஸகலவேதங்களையும் அத்தியயனம் செய்தவனுவான்- அவன் எல்லாவேதங்களிலும் விஹிதமான கர்மங்களை யனுஷ்டித்தவனுவான். அவன் எல்லாவேதங்களாலும் அறியப்பட்டவனுவான், அவன் எல்லாயாகங்களையும் செய்தவனுவான். அவனுல் இதிஹாஸபுராணங்கள் ருத்திரங்கள் இவைகள் அனேகந்தடவை ஜபிக்கப்பட்டதாகும். காயத்திரிமஹாமந்திரத்தை அனேகந்தடவைஜபித்தவனுவான் பிரணவங்களை அனேகந்தடவை ஜபித்தவனுவான்- தன் வம்சங்களின் முன்னே பத்துவம்சங்களையும் பின்னே பத்துவம்சங்களையும் ரட்சிப்பான்- கண்கண்டவரை பங்தியை ரட்சிப்பான்- இங்ஙனம் அதர்வசிரஸ் அவர்வசிரஸைக்கூறினர். இதை ஒருதரம் ஜபித்தவன் சுத்தனுகவும், பூதனுகவும், ஸர்வகர்மார்ஹனுகவுமாவான். இரண்டாந்தரம் ஜபித்தவன் காணுபத்தியத்தியத்தை யடைவான் மூன்ருந்தரம் ஜபித்தவன் ஸாட்சாத்பரமேசுவரனையே அனுப்பிரவேசிப்பானென்பதோம் சத்தியம்- ௭—ம

(வி—ரை) அதர்வசிரஸை நித்தியம் அத்தியயனம் செய்வானென்ருல் அதற்குரிய நியமங்களுடன் அதனை ஜபிப்பானென்பது கருத்து. பிராமமணன், அவனன்றிமற்றவர்களுக்கு அதனையத்தியயனம் செய்வதிலதிகாரமில்லையென்பதனுற் குறிக்கப்பட்டது. அக்கினிபூதன் —சிரௌதஸ்மார்த்தாக்கினிகளால் ஸம்ஸ்காரம்செய்யப்பட்டவனுக்குச்சமானமாவான். அவனுக்குச் சமானமான புண்ணியத்தை யடைவானென்பதுகருத்து. வாயுபூதன் =பிராணுதிதசவாயுக்களையோகத்தால் சுத்திசெய்தவன். அவனுக்குச்சமானமான புண்ணியமுள்ளவனென்று எங்குங்கட்டுக. அவனுதித்தியபூதன் = ஆதித்தியனது கிரணங்களை புசித்துத் தவஞ்செய்யும் யோகிக்குச் சமானன் சோமபூதன் = ஸர்வசோமயாகங்களிலும் தீட்சைசெய்துகொண்டவனுக்குச்சமானன். அல்லது சந்திரகிரணங்களைபுசித்துச் சீவிப்பவன். ஸத்தியபூதன் = அந்ருதாத்ஸத்யமுபைமி — அந்ருதத்திலிருந்து சத்தியத்தையடைவேன், என்று ஆதானத்துக்குச் சத்தியமென்றபெயருள

தாதலால், அதனையனுஷ்டித்தவனுக்குச்சமன். அல்லது சத்தியமென்பது ஓர் லோக விசேஷம். அந்தலோகத்தில் பிரம்மாவுடன் வேதாந்தவிசாரத்தைச் செய்து ஒருவனடையும் நற்பயனைப் பெறுபவன். அல்லது சத்தியமென்பது சத்தியவசனமாகிய உண்மையென்றும் சத்தியவர்த்தியாகிய உத்தமபுருஷனுக்குச் சமானனாவான் ஸர்வபூதங்ஙை ஒருவனை பாவனம்செய்யும் கூச்மாண்டாதி அநேக ஸத்கர்மங்களை யனுஷ்டித்தவனுக்குச் சமானன். ஸர்வதீர்த்தத்தால் ஸ்நானமென்றால், ஸர்வதீர்த்தஸ்நானம் செய்தவன் என்பதாகி இரண்டுவாக்கியம் வெளி. எல்லாவேதங்களிலும் விஹிதமானகர்மங்களையனுஷ்டித்தவனென்றால், நாற்பத்தெட்டுவருஷங்கள்வரை பிரம்மசரியத்துடன் இருந்து அநேகவிரதங்களையனுஷ்டித்து கர்மங்களைப் பூர்த்திசெய்தவன். வேதங்களிற்குறித்த ஸமஸ்தயஞ்ஞாதிகளுக்குரியதேவதைகளும், 'ஸர்வம்சிவமயம்' என்ற ஞானத்துடன் ஸர்வவேதசமானமான இவ்வுபநிடதத்தை அத்தியயனம் செய்தபுண்ணியபுருஷனையறிவாராதலின் எல்லாவேதங்களாலறியப்பட்டவனென்றும் எல்லாயாகங்களையும், செய்தவனென்றும், புகழப்பட்டான். ஸர்வமந்திரஸாரபூதமான சிவமயப்பிரணவோபாஸ்தி இங்கிடத்தே குறிக்கப்பட்டமையால் அந்தப் பிரணவோபாஸ்திசெய்தஇவன் ஸர்வமந்திரங்களையும் ஜபித்தவனுக்குச் சமானனும், அந்தபிரணவத்தையும் வேறொருபதபுத்தியில்லாமல் சுதந்திரமாய்ச் ஜெபித்தமற்றவனைக் காட்டிலும் சிறந்தவனென நிரூபித்தற்காக இதில் ஒருமுறை ஜெபத்திற்கு அதில் அநேகமடங்கு ஜபங்களை ஈடாகக்காட்டி இப்பிரகரணம் நிறைவேற்றுக. இப்படி யுபாஸ்திசெய்த ஒருவனுக்கு மட்டுமல்லமுக்தி; மற்றும் முன்னோர்களிற்பதின்மர், பின்னோர்களிற்பதின்மர், தன்னோடு இருபத்தொருதலைமுறைகளுக்கு முக்தியைக்கொடுக்கும் என்பது தத்தம் வம்சங்களில் என்றவாக்கியத்தின் வெளிக்கருத்து. உண்மையில் முன்பத்து ஜன்மங்களிலும், ஏதேனும் பிராரப்தசேஷத்தால் உண்டாகக்கூடியபந்தியிலும் இவனைக்காத்து ரட்சிக்கும் இதனை ஜபம்என்பது உட்கருத்து. கண்டயவரைப்பங்க்தியைரட்சிப்பான் = பங்தியிலுட்கார்ந்த இவனுக்குக்கண் எதுவரையிலெட்டுமோ அதுவரையில் பலபாவிகளிருந்தாலும் அந்தப்பாபிகளுடைய பாபத்தை தொலைப்பான், திருசுபர்ணமந்திராதிபாடத்தில் ஆயிரம் என்ப

அ

தாதி எல்லையிருப்பது போலிதற்கில்லையென்றேற்பட்டது. ருத்
ஸனம் அதர்வசிரசு அதர்வசிரஸைக்கூறினர் என்ற சுருதிவாக்கிய
ம் பிரகிருதத்திற் பொருந்தாது. மேலும் இவ்வுபநிடதசனங்கள் ஏ
ஸவுளவாகலால்; ஆகவே முன்னர் துவக்கத்திலுள்ள "ஹொ
ரோஸ" என்ற வாக்கியத்தைப்போல் (ருத்ராய நமோ அஸ்து
என்றுவரப்போகிற வாக்கியத்தினிறுதியில் சேர்க்கவேண்டும்.
இதனையொருதரம் ஜபித்தவன் சுத்தனும பூதனுமாவான். சுத்
தன் = வெளிச்சுத்தியுள்ளவன் பூதன் உள்சுத்தியுள்ளவன். ஸர்
வகார்மார்ஹன் = அதற்குரிய ஜபத்தை முதலிய நற்குணமுடைய
வன் இருமுறை ஜபித்தவனுக்கு சிவகணத்தில் சேர்க்கையும்
மூன்றாம்முறை ஜபித்தவனுக்கு சிவைக்கியமும்பலமென்றது
த்தரோத்தரம்பலன் அதி.மென்பதைக்குறித்தற்கு. தேவனைப்
ரவேசிப்பதே மோட்சமென்பது பிரத்தியட்சபிரம்மைக்கியத்தை
யேகுறிக்கிறது. இப்பொருளேசர்வவேதவேதாந்தங்களின் தேர்ந்த
சித்தாந்தம் இதுவேயென்பதை மந்திரதிரஷ்டாவான ரிஷியா
னவர் என்பதோம் சத்தியம் என்பதாகநிச்சயமாய் கூறினர்.

அவதரணிகை

இவ்வுபநிடதத்தை யுபசங்கரிப்பாராய்ருத்திரனே ஸர்வ
சொரூபனென்று அனுஸந்தானம்செய்து அவனை நமஸ்கரிக்கின்றார்.

யோ ருத்ரோ அக்னௌ யோ அப்ஸு
ய ஓஷதீர்வீருத ஆவிவேஶ
ய இமா விஶ்வா புவநாநி சக்லுபே
தஸ்மை ருத்ராய நமோ அஸ்து — என்று

(இ—ள்) எந்தருத்திரன் அக்கினியிலும் அப்பிலும்
ஓஷதிகளிலும் விருத்துகளிலும் உட்பிரவேசித்தான் எவன்
இந்தப்புவனங்களையெல்லாம் சிருஷ்டித்தான் அந்தருத்திரனு
க்குநமஸ்காரம்

(வி—ரை) அக்கினியில் = அக்கினிஹோத்திராதியில். அப்பி
ல் = கலசாதிகளில் உபாசகர்களுக்கு உபாஸிக்காக அக்கினிக

களில் சன்னிதானம் செய்தவனென்றுகருத்து. ஓஷதிகள் = பயன் கொடுப்பதுடன்மாண்டு போவன. மற்றவை விருக்ஷங்கள் அவைகளிலெல்லாம் உட்பிரவேசித்தவனென்றால் ஸர்வாந்தர்யாமி யென்று பொருள். புவனங்களைஸிருஷ்டித்தான் = ஐந்தொழில் க ய்யுமவற்றான் இவ்விதலட்சணம் பொருந்திய ருத்திரனுக்கு நமஸ்காரம் என்றது அதர்வசிரஸ் என்ற மஹாரிஷியின் முக மாக வெளிப்பட்ட வேதவாக்கியமாம். முன்மந்திரத்தில் விட்ட வாக்கியத்தை இவ்விடத்தில் சேர்த்துப்பொருள் கொள்க. இதன் மேலும் வேதவாக்கியங்கள் தொடர்ந்து வருதலால் என்க.

அவதாரிகை

மேல்அதர்வசிரத்தில் உத்பத்தியைக்கூறுகின்றார்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible] என்று

(இ—ள்) இச்சமயம் இந்த அதர்வாவின் தலையினின்று இதயத்தை பிளந்து மஸ்திஷ்கத்துக்குமேல் தள்ளிக்கொண் டு வாயுவானவன் செல்லதேவகோசம் உண்டாயிற்று. அ தனை அதர்வா அதர்வசிரமென்றழைத்தார். எ—து

(வி—ரை.) இச்சமயம் = சமாதியால். ஏதத் = இந்தஉபநிஷத் தைக்கண்ட. அதர்வாவின் தலையினின்று = கபாலத்தினின்று, இ தயத்தைப்பிளந்து = அடியில் இதயத்தைப்பிளந்துகொண்டு, மஸ் திஷ்கத்துக்கு = தசமஸ்தானத்துக்கு கீழ்ப்பட்ட உரைந்த நெய் யைப்போலிருக்கும் மாம்ஸத்தைமஸ்திஷ்கமென்பர். அதன்மே ல் என்றால் துவாதசாந்தபரியந்தமென்பது பொருள், அதன்மே ல்வெளிக்கிளம்பியது தேவகோசம் பிரகாசசொரூபம். அதைவாயு வென்றமையால் பிராணவாயுவைசமாதியில் தகைந்தபிராணவாயு

வானது அக்கினிரூபமாய்ப்பரிணமித்து வெளிவந்ததே. இவ்வத் த்வரூபமென்ற வேதாந்தமாமென்பது மந்திரத்தின் முடிந்த கருத்து. இதனால் "ஸுவஸ்ய ஹோதா ஸ்வஸ்ய பஸ்வலிதம் = இந்த மஹாபூதத்துக்கு எது உயர்த்தலோ" என்றதனிமுயற்சியன்றி வெளிவந்த வேதங்களைப்போல இதுவும் எத்தனையின்றி வெளிவந்தமையால் அநாதிநித்திய சொயம்புவென்றும் அளவிற்பெருமைபெற்றதென்றும் ஏற்பட்டது. மற்றவேதபாகங்களுக்கு அமைந்தரிஷிகளைப்போலல்லஇவர் உபசாரரிஷியாமென்க,

அவதரணிகை

இனி ஸர்வஸ்வரூபனாகிய அதர்வாவின்பிராணவாயுவைப்பிரார்த்திக்கின்றார்.

ஸத்ராணோ வஹிரக்ஷது
ஶ்ரியம் ஸ்ஹமே யச்சது|
வித்யா ஸ்ஹமே யச்சது
மோக்ஷம் ஸ்ஹமே யச்சது|| எ—து

(இ—ள்) அதர்வப்பிராணன் ஸ்ரீயையும், அன்னத்தையும், மனத்தையும்; வித்தையையும், அன்னத்தையும்மனத்தையும்; மோட்சத்தையும், அன்னத்தையும், மனத்தையும் ரட்சிக்கவேண்டும். எ—று

(வி—ரை) அதர்வப்பிராணன் = முற்குறித்த அதர்வாவின் பிராணன், இச்சராசரசொரூபமாயுள்ளது- ஸ்ரீயை "ஸர்வஸ்ரீர்ஹிதா வஹிதம் = அநுபவிக்கத்தக்கவைகளுக்கு ஸ்ரீ" என்று வேதங்குறித்தவாறு சர்வசம்பத்துக்களையும்; அன்னத்தை = சரீரத்தை; மனதை = இந்திரியத்தை. அப்படிய வித்தையை = கர்மங்களைப் புரிந்திட்டு உண்டாகும் ஞானத்தை- அதனாலுண்டான அன்னத்தை = சுத்தமான அந்தக்கரணத்தை; மனத்தை = நிர்விஷயமான மனத்தை. அந்தவித்தையைப்பெற்றதனால் மோட்சத்தை அன்னமென்ற பிரம்மத்தை- மனமென்ற நித்தியாஸனத்த- இரட்சிக்கவேண்டுமென்றதால் புருஷார்த்தங்களைக்கொடுத்தருளவேண்டியது.

அதர்வசிரோபநிடதம்

அவதாரணிகை

இவ்வுபநிடதத்தையுபசங்கரிக்கின்றார்.

இதி ப்ராஹ்மணம் இத்யுபநிஷத் என்று

(இ—ள்) இங்ஙனமோக்ஷசத்தியமென்பதுபநிடதம்

(வி—ரை) இதுவரையிற் சொல்லப்பட்டதெல்லாம் சர்வ வேதங்களுக்குஞ் சம்மதமும் வேதபரம்பரையின் மகுடமணியாய் பரமசித்தாந்தமாய் விளங்குவது இவ்வுபநிடதமென்று முன்மந்திரதிரஷ்டாவின் பிரதிஞ்ஞையைத்தானே வேதபுருஷனே இங்கு எடுத்து நிரூபித்தான் என்பது அளவிலாப் பிரளயசமுத்திரம் போன்ற இதனருட்பொருட்டிகளில் இரண்டொருதிவலைகள் ஈசன்றிருவடிக்கர்க்கியமாய் விளங்குக. சுபம்

இங்ஙனம்கௌண்டிகுலப்பாலாழிக்குக்கௌஸ்துபமணியாய்த்தேசன்றி, ஸ்ரீமேதாதெட்சணாமூர்த்தி கருணாகடாட்சத்தாற் சகலகலைகளுமோதியுணர்ந்து மிசிரமண்டலத் திற்றமது விஜயப்பிரதாபநிலைநாட்டிய மகாதேவ தீட்சிதர்வம்சதிலகராய் வையாகரணசார்வபௌமஸ்ரீராமஸ்வாமிதீட்சிதர் செல்வகுமாரரும் ஸ்ரீசிதாம்பரகற்பகத்திமுத்தொகுத்தவரும், ஸ்ரீமத் பாரத்துவாஜகுலஜலதிக்குக்கௌஸ்துபமணியாய் அத்துவித வித்யாசாரியராய் நூற்றுநான்கு கிரந்தங்களை நிர்மித்தருளியஸ்ரீமதப்பயதீட்சிதேந்திரர்வம்சத்திலவதரித்தஷட்சாஸ்திரவல்லபபாரமேசுவர வுபநிஷன்மார்க்கப்பிரவர்த்தகஸ்ரீ மஹாமஹோபாத்தியாயஸ்ரீமத்தியாகராஜகுருபுங்கவர்சரணசேவாபராயணரும்பிரத்யக்பரசிவநிட்டாதுரந்தரபரமசாம்பவபாதபத்மரேணுசேவனத்திலன்புமிகுந்துள்ளவரும்,பிரம்மவித்யாபத்திராதிபருமான பரசமய,பஞ்சானன,பாஞ்சஜன்னிய.பண்டித ஸ்ரீனிவாஸமகிபுங்கவர்வடமொழியிலியற்றிய அதர்வசிரோலகுதீபிகை

முற்றிற்று.

அதர்வசிரோபநிடத தாத்பரியசங்கிரகம்

இவ்வுபநிடதம் வெளிப்படையாய்ப் பரமசிவ மூர்த்தியின் அளவிலாப் பெருமையை விளக்குவதொன்றாதலினிதற்கமைத்தபொழிப்புரை விசேடவுரைகளன்றி வேறுதாற்பரியஸங்கிரகம் தனித்துரைப்பதவசியமன்று. உபக்கிரமோப சம்ஹாரங்கள் முதலிய அறுவகைக்குறிப்புகள் ஒவ்வொரு சொற்றொடர்களுக்கவசியமேயாயினும் அவை பொருட்டெளிவிற்கேயன்றி ஐயந்திரிபற அங்கைநெல்லிக்கனிபோல் பொருள்களைத் தெள்ளென விளக்கும் வாக்கியங்களில் அவசியங்களாகா. மீமாஞ்சாநியாயங்களாயின் முரண்மையந்தோன்றிய விடமதனை யொழிக்கவே யெழுந்தன. ஆதலாற்றான் ஆசிரியர் பாதராயணமுனிவர் கோமானியற்றிய பிரும்ம சூத்திரங்களில் பிரும்மசொரூபத்தைத் தெள்ளென விளக்குவதிலெட்டெண்ணேறிய நூறுமுபநிடதங்களில் மிகச்சாரமென்றகமகிழ்ந்தாஞ்சனேயருக்கரக்கர்குலாந்தக ரகுகுல சிகாமணிகோதண்டபாணி மனமுவந்துபதேசித்த மாண்டூக்கியோபநிடதத்தையும் கன்மமீமாஞ்சையென்ற வேதவாக்கியவிசாரத்திலுபயோகப்படுமாயிர அத்தியாயங்களடங்கியவற்புதசாஸ்திரமியற்றியருளிய ஜைமினிமுனிவர்கண்ட திவ்யசாகையாகிய தலவகாரசாகையினின்றிதினுள்ள கேனோபநிடதத்தையும் பற்றியாதும் விசாரித்திலர். அதனாலவ்வுபநிடதங்கட்கு வேதாந்தமென்ற பெயரே எவரேனும் வேண்டாமென்பரா? அல்லது கன்மகாண்டமென வாதிப்பரா? ஆதலால் தெள்ளென பிரணவ பரசிவாபேதத்தைக் காட்டுதவேடங்களிற்சிறந்த திருநீற்றை முறைபிறழாதணியும் முத்திய வழியை விளக்கி கருணைக்கடல் கண்ணுதல் வள்ளல் திருநாமங்களிற் பலவற்றைத் துலக்கி பரமவைதிக பாசுபத பிரம்மவித்தையாய் விளங்குமிவ்வதர்வசிர உபநிடதத்திற்கு வகுப்புகளைக் கொண்டு தாற்பரியமுரைப்போமாயின் அக்கினிபகவானுக்குச் சூடுண்டோவெனச் சங்கிக்குமோர் வித்துவானுக்குத்தக்க காரணங்களாலதனைத் தெரிவிப்பதுபோலாகும். ஆயினும் ஜாலவித்தைக்காரனொருவன் செந்தழலைத்தமதகங்கையிலெடுத்துப் பிறரைமயக்கக்கண்டவொருவனதுவுந்தன்மையுடையதேயென மயங்கினும் மயங்குவான், அத்தகைய புருடோத்தமர்க்கித்தகைய சாத்திரங்களின் அதிகாரமேயாதுமிலையாதலினவர் விஷயத்தில் யாம் எழுதவேண்டுவது யாதுமிலை. எல்லாவுபநிடதங்கட்குந்தவறாது தாற்பரிய ச

க்கிரகங்கூறிவரும் யாம் அவ்வழக்கப்படி இதற்குமோர்சிறிது தாற்பரியஞ்சுருக்கிக் காட்டுவாம். இவ்வுபநிடதம் வேதாந்த கன்மங்களாற் சித்தசுத்திபெற்ற மகானுபாவராசிரியர் முகத்தில் வேதாந்த விசாரஞ்செய்து ஸ்ரீ கைலாசபரியந்தமாகிய மகாபதவிகளைப் பெற்றவ்விடத்தருட் டிருமேனிதாங்கி அனுக்கிரகங்களிக்க ஆரணபொருளுபதேசிக்கு மம்புலிசூடிய வெம்பிரானிருவருளால் பிரணவபிரத்தியகாதம பரசிவைக்கிய ஞானமென்ற மகாநிஷ்டையுண்டாக வதனால் வீடுகூடுவானென்ற வரிய பொருளுணர்த்தித் தியசுயம்புவான வேதங்களின் சிகாத்தலமந்தது, என்றோர் அர்த்தவாதமுகத்தால் நிரூபித்து சிவாத்துவிதவித்தையே வித்தைகளுள் சிறந்ததென வான்மவர்க்கங்கட்குபதேசிப்பதே இதன் கருத்தாம் என்பதோர் சிறிது. இவ்வுபநிடத்தின் கண் பிறர்செய்த விபரீதவாசகங்களை அதர்வ சிரோபாஷ்யமென்ற பெரிய நூலில் ஆயிரங்கிரணங்களிலும் மறுத்தோமாதலினிங்கவைகளைப்பற்றி யாதும் பேசினேமில்லையென்க.

அதர்வசிரோபநிடத தாத்பரிய சங்கிரகம்,

முற்றிற்று.

அதர்வசிரோபநிஷத் அரும்பதவிளக்கம்

— () —

𑌅𑌨𑍁𑌷𑍍𑌟𑍁𑌭𑍍 = ஒருவகையாப்பு.

𑌅𑌪𑌾𑌮 = அருந்தினோம்.

𑌅𑌮𑍃𑌤𑌾 𑌅𑌭𑍂𑌮 = தேவத்தன்மையைப்பெற்றமனிதன்.

𑌅𑌰𑌾𑌤𑌿𑌃 = சத்துரு.

𑌅𑌕𑍍𑌷𑌰𑌂 = ஆன்மஸ்வரூபம், வித்தியை.

𑌅𑌨𑍍𑌤𑌰𑌃 = உட்புறம்.

𑌅𑌣𑍍𑌡𑌂 = உலகம், ஸ்தூலசரீரம், சுத்தமான அந்தக்கரணம், பிரும்மம்.

𑌆𑌹𑌵𑌨𑍀𑌯𑌂 = ஓர் அக்கினி.

𑌇𑌷𑌮𑍍 = அன்னம்.

𑌉𑌦𑌙𑍍𑌵𑌃 = வடக்கேயுள்ளவன்.

𑌉𑌪𑌸𑌂𑌹𑌰𑌤𑌿 = ஒடுக்கிக்கொள்வான்

𑌊𑌰𑍍𑌜𑌮𑍍 = பலம்.

𑌏𑌕𑍋𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 = ஒருவனான ருத்திரன்.

𑌓𑌷𑌧𑌯𑌃 = திருடன் ஒழிந்திம் புல்வர்க்கங்கள்.

𑌕𑌰𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌃 = கன்மங்களுக்கு அதிபன்

𑌕𑍍𑌰𑍀𑌡𑌤𑍇 = நிகழ்கிறான்

𑌕𑍍𑌰𑍀𑌡𑌯𑌤𑍇 = நிகழச்செய்கிறான்.

𑌗𑌾𑌣𑌪𑌤𑍍𑌯𑌂 = கணங்களுக்குப்பதியாயிருத்தல்

𑌗𑌾𑌯𑌤𑍍𑌰𑍀 = ஓர்யாப்பு, ஓர்மகாமந்திரம், ஓர்தேவதை.

𑌗𑌾𑌰𑍍𑌹𑌪𑌤𑍍𑌯𑌃 = ஓர் அக்கினி.

𑌗𑍌𑌃 = வாக்கு, இந்திரியம், நேத்திரம்,

𑌗𑍌𑌰𑍀 = பார்வதி.

𑌚𑌕𑍍𑌷𑍂𑌂𑌷𑌿 = இந்திரியங்கள்.

𑌜𑌪𑌤𑌿 = த்யானிக்கிறான்,

𑌜𑌨𑌕𑌃 = ஜனங்களைக்கொடுப்பவன் அதாவது பிராணாபிமானிதேவதை.

ஜ்யேஷ்ட²: = முதிர்ந்தவன்

த்ரைஷ்டுப⁴ம் = ஓர்யாப்பு.

தேஜ: = தேயு, பிரகாசம்.

த³க்ஷிணாம்ச²: = தென்புறத்திலுள்ளவன்.

த³க்ஷிணாக்³நி: = அப்பெயருள்ள ஓரக்கினி.

தீ³ப்தகோச²: = பிரகாசமான ஓர்கோசம்.

புண்யம் = புண்ணியம்

தூ⁴ர்த: = தூர்த்தன், வஞ்சகன்

நித்யாநித்ய: = நித்யனுமநித்யனும்

மாம்ஸபிண்ட³ம் = மாம்ஸபிண்டம்

பாசு²பதம் = பசுபதியைதேவதையாயுடையது

பூத: = பாஹ்யசுத்தியையுடையவன்

ப்ரணயதி = சேர்ப்பிக்கின்றான்

ப்ரத்யம்ச²: = மேற்கேயுள்ளவன்

ப்ராஜாபத்யம் = பிரஜாபதியை தேவதையாயுடையது

ப்ராண: = ஸ்தூலசரீரம். பிராணாதிபஞ்சவாயுக்கள்

ப்ராம்ச²: = கீழ்ப்புறத்துள்ளவன்

ப்³ருஹதி = விர்த்தியடைகிறான்,

ப்³ருஹயதி = பருக்கச்செய்கிறான், விரியச்செய்கிறான்

ப்³ரஹ்ம = பிரும்மம், சுத்தமான அந்தக்கரணம், மனமென்றஇந்திரியம்

ப்⁴ராஜதே = விளங்குகின்றான், நிலைபெறுகின்றான்

மஸ்திஷ்கம் = மூளையைப்பற்றி நெய்போல் உறைந்திருக்கும் ஓர்வகை மாம்சம்

மாஹேச்²வரத்வம் = சிவமஹத்துவம்.

லிங்கம் = லிங்கசரீரம், குறி

வர்தாமி = இருக்கிறேன்.

வரிஷ்ட²: = பெரியோன்

ஶாஸயதி = நிலைபெறச்செய்கிறான்

விஶ்வரூபஃ = ஸர்வஸ்வரூபன், விச்வஸ்வரூபன்

வீருதஃ = மரம் முதலியன

வ்ருத்திஶிஷ்டஃ = மிஞ்சினவன்

ஶாந்திஃ = மோட்சம், ஒழிவு.

ஶ்ருதிஃ = வேதங்கள், ஞானம்.

ஶக்தீ = உள்சக்தியுடையவன்.

ஶ்ரேஷ்டஃ = புகழத்தக்கவன்

ஸத்யஃ = உண்மைப்பொருளாயுள்ளது, ஆதித்தன்

ஸம்ஸ்ருஷ்டஃ = வெளிப்பட்டது.

ஸரஸ்வதீ = ஓர்வகைச்சந்தம், ஓர்தேவதை

ஸாவித்ரீ = ஷை

ஸ்ருஜதி = விடுகிறான், சிருஷ்டிக்கிறான்

ஸௌம்யம் = செந்தண்மையுடையது, சந்திரனை தேவதையாக உடையது

ஹவிஃ = ஹவிஸ், சரீரம், பிரபஞ்சம்

ஹ்ருதயம் = மனம், இதயமென்ற மாம்ஸகண்டம்.

க்ஷரம் = பிரகிருதி, அழிவுள்ளது

அதர்வசிரோபநிடத அரும்பதவிளக்கம்
முற்றிற்று.

[illegible]

[illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

𑌪𑍍𑌰𑌾𑌂𑌶𑌃 = [illegible] |

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌂𑌶𑌃 = [illegible] |

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌂𑌶𑌃 = [illegible] |

𑌉𑌦𑌂𑌶𑌃 = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

𑌪𑍍𑌰𑌾𑌜𑌾𑌪𑌤𑍍𑌯𑌂 = 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌂 [illegible]

𑌸𑍌𑌮𑍍𑌯𑌂 = 𑌸𑍋𑌮𑌦𑍈𑌵𑌤𑍍𑌯𑌂 [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] |

[illegible] = [illegible] = [illegible] |

[illegible]